DIRECTOR OF SOCIAL WELFARE
04 AUG 2017
GUINDY, CHENNAI-600 032.

24533

## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் – பத்தாம் வகுப்பு படிக்க இயலாத மனவளர்ச்சி குன்றிய பயனாளிகளுக்கு விதித் தளர்வு செய்து – சிறப்பு நேர்வாகக் கருதி முதிர்வுத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை

அரசாணை (ப) எண்.160 நாள் 01.08.2017
ஹேவிளம்பி, ஆடி 16
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண். 199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 31.12.2001.
2. அரசாணை (நிலை) எண்.117, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 14.05.2017.
3. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.042794/குந3/2016, நாள் 17.03.2016, 02.05.2016, 05.07.2016, 16.08.2016 மற்றும் 27.04.2017.

---

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஏனையவற்றுடன், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடைய பயனாளி 10ம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதியிருக்க வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி.ஜமுனாராணி (க/பெ.தட்சிணாமூர்த்தி) அவர்களின் பெண் குழந்தை செல்வி டி.விஷ்ணுப்பிரியா மனவளர்ச்சி குன்றிய காரணத்தினால் அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 31.12.2001ல் உள்ள விதி எண்.7(5)ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடைய பயனாளி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியிருக்க வேண்டும் என்ற கல்வித் தகுதியினை செல்வி.டி.விஷ்ணுப்பிரியா பொருட்டு தளர்வு செய்து பயனாளிக்கு முதிர்வுத் தொகை வழங்க சமூக நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் சமூக நல ஆணையர் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் வைப்புத் தொகை இரசீது பெற்ற பயனாளியான K.சரண்யா என்பவர் மூளை வளர்ச்சி குன்றியதால் பத்தாம் வகுப்பு படிக்க இயலாததால் முதிர்வுத்

(த.பி.பா.)

தொகை வழங்க தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு அனுப்ப இயலவில்லையென்றும், அன்னாருக்கு முதிர்வுத் தொகை வழங்குவது தொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட சமூக நல அலுவலர் அறிவுரை கோரியுள்ளதாகவும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் படி, பயனாளி 18 வயது பூர்த்தியடைந்து, 10–ம் வகுப்பு படித்திருந்தால் மட்டுமே முதிர்வுத் தொகை வழங்கப்படும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளதாகவும், அதனால் பயனாளியான K.சரண்யா மன வளர்ச்சி குன்றிய காரணத்தினால், 10–ம் வகுப்பு படிக்க இயலவில்லையென்பதால் முதிர்வுத் தொகை வழங்குவதற்கு பரிந்துரை செய்ய இயலவில்லை என்றும், அன்னாரின் உடல் நிலையை கருத்தில் கொண்டு முதிர்வுத் தொகை வழங்குவதற்கு சிறப்பினமாகக் கருதி ஆணை வழங்கிடுமாறு அரசைக் கோரினார்.

4. மேலும், அவர் பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிகள், மனவளர்ச்சி குன்றியவர்கள், பிறவியிலேயே மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்கள், எதிர்பாராத விதமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டோ அல்லது விபத்தினால் பாதிக்கப்பட்டோ மாற்றுத் திறனாளியாக ஆகும் பட்சத்தில், அவர்கள் தங்களது கல்வியினை தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இந்நிலையில் உள்ளவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற மாவட்ட சமூக நல அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்து அவர்களது பரிந்துரை மற்றும் மாற்றுத் திறனாளி அதிகாரிகள் சான்றின் அடிப்படையில் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி முதிர்வுத் தொகை வழங்க அனுமதி ஆணை வேண்டியுள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவை ஆராய்ந்த அரசு அதனை ஏற்று அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 31.12.2001ல் விதி 6(5) மற்றும் 7(5)ல் கண்டுள்ள முதிர்வுத் தொகையை பெறுவதற்கு பயனாளி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியிருக்க வேண்டும் என்ற கல்வித் தகுதி விதியினை தளர்வுச் செய்து, சிறப்பினமாக கருதி கன்னியாகுமரி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய காரணத்தால் பத்தாம் வகுப்பு படிக்க இயலாத பயனாளிகளான செல்வி K. சரண்யா, செல்வி S. ஆன்சி மற்றும் செல்வி S. தஸ்மா ஆகியோருக்கு முதிர்வுத் தொகையை வழங்கவும் மேலும், பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பயனாளிகள், மனவளர்ச்சி குன்றியவர்கள், பிறவியிலேயே மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்கள், எதிர்பாராத விதமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டோ அல்லது விபத்தினால் பாதிக்கப்பட்டோ மாற்றுத் திறனாளியாக ஆகும் பட்சத்தில், அவர்கள் தங்களது கல்வியினை தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மாவட்ட சமூக நல அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்து அவர்களது பரிந்துரை மற்றும் மாற்றுத் திறனாளி அதிகாரிகள் சான்றின் அடிப்படையில் அந்நேர்வுகளை சிறப்பினமாகக் கருதி அவர்களுக்கு முதிர்வுத் தொகை வழங்கவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.38853/நிதி(சந)/2017, நாள் 25.07.2017–ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–02.15.
மாவட்ட சமூக நல அலுவலர், சென்னை.

(த.பி.பா.)

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்,
சென்னை – 600 002
மாவட்ட கரூவூல அலுவலர், மதுரை (சமூக நல இயக்குநர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 600 008.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை 600 018

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 600 009.
நிதித் (சமூக நலம்) துறை, சென்னை – 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந 2) துறை,
சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்